**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **C.C No. 50/2021** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for | | Prosecution : | **PW - 3** |
| | | Defence : | |
| | | Court : | |

| | | |
|---|---|---|
| Name | : | மூர்த்தி |
| Father / Husband Name | : | கிருஷ்ண அய்யர் |
| Village | : | 45 ஏ. சௌராஷ்ரா மேல ராஜ வீதி, மானம்புசாவடி, |
| Taluk | : | தஞ்சாவூர். |
| Caste & Religion | : | இந்து |
| Calling | : | நெசவுத் தொழில். |
| Age | : | 64 /2021 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11 .10.2021**
**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது** திருமதி **எஸ். ஜெயந்தி**, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, **திரு. எம். செழியன், தட்டச்சர்**

**C.C No. 50 /2021 D**ate: 11.10.2021

**முதல் விசாரணை :**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து மேற்கண்ட முகவரியில் நெசவுத் தொழில் செய்து வருகின்றேன். அ.சா.1 சுபாஷினி எனது மகள் ஆவார். 24.01.2021 அன்று கும்பகோணத்தில் இருந்து அ.சா.1ம் அவரது கணவர் அவர்களது மகனுடன் என் வீட்டிற்கு வந்தார்கள். அப்போது ஆட்டுக்காரத் தெருவில் ஜெயபால் மளிகை கடை முன்பாக நடந்து வந்து கொண்டு இருந்தபோது இரவு 9.40 மணியளவில் எதிர் திசையில் இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் எனது மகள் கழுத்தில் அணிந்து இருந்த 3 1/2 பவுன் தங்க செயினை பறித்து சென்று விட்டதாக எனக்கு போன் செய்து கூறினார்கள். நான் அப்போது வீட்டில் இருந்தேன். நான் சம்பவ இடத்தில் சென்று பார்த்தபோது கூட்டமாக இருந்தது. பின்னர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தோம். எனது மகள் கிழக்கு காவல்

நிலையம் சென்று புகார் அளித்தார். அதன் பேரில் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

புகார்தாரர் எனது மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு. என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-1
தஞ்சாவூர்(முகூபொ)

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **C.C No.50/2021** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for | | Prosecution : | **PW - 4** |
| | | Defence : | |
| | | Court : | |
| Name | : | சாந்தாராமன் | |
| Father / Husband Name | : | ராஜு | |
| Village | : | 38-39, கிருஷ்ணன் கோவில் தெரு, மானம்புசாவடி, | |
| Taluk | : | தஞ்சாவூர். | |
| Caste & Religion | : | இந்து | |
| Calling | : | நெசவு தொழில். | |
| Age | : | 51 /2021 | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11 .10.2021**
**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது** திருமதி **எஸ். ஜெயந்தி**, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, **திரு. எம். செழியன்**, **தட்டச்சர்**

**C.C No. 50 /2021 D**ate: 11.10.2021

**முதல் விசாரணை :**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தஞ்சாவூர் பட்டு சொசைட்டியில் நெசவு தொழில் செய்து வருகின்றேன். அசா.1 சுபாஷினி என் அக்கா மகள் ஆவார். 24.01.2021 அன்று இரவு 9.30 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எனது அக்கா மேனகா எனக்கு போன் செய்து தனது மகள் சுபாஷினி கும்பகோணத்தில் இருந்து தஞ்சாவூர் வந்தபோது தொம்பன் குடிசையில் இறங்கி ஆட்டுக் காரத்தெருவில் நடந்து வந்து கொண்டிருந்தபோது டிரான்ஸ்பார்மர் அருகில் எதிர் திசையில் இரண்டு நபர்கள் இருசக்கர வாகன்த்தில் வந்து சுபாஷினியின் கழுத்தில் அணிந்து இருந்த 3 1/2 பவுன் தங்க செயினை அறுத்துச் சென்றுவிட்டதாக கூறினார்கள். பின்னர் சுபாஷினி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**C.C No.  50 /2021  D**ate: 11.10.2021

**எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை :**

வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு. என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-1
தஞ்சாவூர்(முகூபொ)